# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

# Tamil Study Centre - Mount Druitt


**Mobile: 0449 892 066**

**Email :**[mtdruitttsc@gmail.com](mailto:mtdruitttsc@gmail.com) **Web :** [www.mtsc.org.au](http://www.mtsc.org.au)


## செய்தி மடல் 2019 – 04

**30-11-2019**

*எமது தாய்மொழி தமிழே! அதுவே எமது வாய் மொழி!.* அத்தமிழை கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

1. *வருடாந்த பரிசளிப்பு விழா 2019*

எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா மற்றும் நத்தார் கொண்டாட்டமும் இராப்போசன விருந்தும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 21ம் திகதி (21.12.2019) சனிக்கிழமை அன்று மாலை 5.30 மணிக்கு **Erskine Park High School (82 Swallow Dr, Erskine Park NSW 2759)** பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

அனைவரும் இவ்விழாவிற்கு உங்கள் உற்றார் உறவினர்கள் நண்பர்களுடன் வருகை தந்து சிறப்பிற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

வழமைபோல விருப்பமுள்ள எமது பெற்றோர்களிடமிருந்து இராப்போசனத்திற்கான உணவுப் பண்டங்கள் பெற்றுக்கொள்ள இருப்பதால் இது தொடர்பான விபரங்களுக்கு எமது உப செயளாளர் திரு. க. சுதாகரன் அவர்களை தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி இல : 0412 125 266)

2. *பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்*

இதுவரை உங்கள் பிள்ளைகளுக்கான கடந்த வருட பாடசாலைக் கட்டணம், இந்த வருடத்திற்கான பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களான அதிஷ்ட இலாப சீட்டிழுப்பு, கலைவிழா பங்களிப்பு கட்டணங்கள் செலுத்த தவறியவர்கள் விரைவாக அதனை செலுத்தி எமக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த வருடம் முதல் எமது பாடசாலை Creative Kids Registered Provider ஆக அங்கீகாரம் பெற்றுள்ளதால் நீங்கள் Creative Kids Voucher மூலமும் எமது பாடசாலைக் கட்டணத்தை செலுத்தலாம். பெற்றோர் கொடுப்பனவை ஏற்கவே பணமாகக் செலுத்திய பெற்றோர்கள், திரும்பவும் Creative Kids Voucher மூலம் அவற்றை செலுத்தி தாங்கள் ஏற்கனவே செலுத்திய பணத்தை மீண்டும் திரும்ப பெற்றுக்கொள்ளலாம் என்பதை உங்களுக்கு அறியத்தர விரும்புகிறோம். மேலதிக விபரங்களுக்கு எமது கல்விநிலைய பொருளாளர் திரு.பே.மகேஸ்வரமூர்த்தி அவர்களை தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி இல : 0422 519 067)

கலைவிழாவுக்கான பங்களிப்பாக பெற்றோர்களிடமிருந்து வருடத்திற்கு ஒரு குடும்பத்திற்கு $50ஐ எமது கல்வி நிலைய பொருளாளர் திரு.பே.மகேஸ்வரமூர்த்தி அவர்களிடம் செலுத்தி பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒத்துழைக்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**பெற்றோர் பங்களிப்புக்கான கட்டண விபரம்**

| | |
|---|---|
| One Student Family (When paid using Creative Kids Voucher ) | $ 50.00 |
| Two Student's Family (When paid using Creative Kids Voucher ) | $ 30.00 |
| Three or More Student's Family (When paid using Creative Kids Voucher ) | $ 0.00 |

### 3. *2020ம் ஆண்டிற்குரிய பாடசாலை நிர்வாகக் குழு*

எமது பாடசாலையின் 2020ம் ஆண்டின் நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக பங்குபற்ற விருப்பமுடையவர்கள் எமது செயலாளர் திரு.சரவணகுமார் ராஜாராம் அவர்களை தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி இல : 0406 374 039)

புதிய நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக சேர விரும்புபவர்களுக்கான விண்ணப்பப்படிவத்தை எமது அலுவலகத்தில் அல்லது வலைத்தளத்தின் வளங்கள் பகுதியிலிருந்து தரவிறக்கம் செய்து பூர்த்தி செய்து எமது செயலாளரிடம் ஒப்படைக்கவேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 07.12.2019 மாலை 4.30மணி. இதுவரை காலமும் பாடசாலை நிர்வாகத்தில் பங்குகொள்ளாத பெற்றோர்கள் ஆசிரியர்கள் 2020ம் ஆண்டின் பாடசாலை நிர்வாகத்தில் இணைந்து மவுண்ட்றூயிட் தமிழ் பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவும்படி தங்களை தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

### 4. *இணையத் தளம்* (Webpage)/ *முகப் புத்தகம்*

எமது பாடசாலை இணையத் தளமான ***www.mtsc.org.au*** மற்றும் முகப்புத்தகம் தேவையான தகவல்ளைக் கொண்டதாக தரவேற்றப்பட்டு புதுப்பொழிவுடன் அனைவரும் பயன்பெறும் வகையில் பாடசாலையினால் பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம். எமது பாடசாலை முகப்புத்தக முகவரி – https://www.facebook.com/groups/374995486577634/

### 5. *பாடசாலை விடுமுறை*

எமது பாடசாலை தவணை நான்கின் கடைசி நாளான 21.12.2019 அன்று பரிசளிப்பு விழாவுடன் நிறைவடைந்து எதிர்வரும் 01.02.2020 சனிக்கிழமை அன்று மீண்டும் புதிய வருடத்திற்கான முதலாம் தவணைக்காக திறக்கப்படும் என்பதனையும் உங்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி

மவுண்ட்றூயிட் தமிழ் பாடசாலை நிர்வாகம்.





"கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனிய என்பேன் எனினும் – **தமிழை**
என்னுயிர் என்பேன் கண்டீர் " – **கவிஞர் பாரதிதாசன்**